அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.232/2015
தேதி 23.9.2015

## ச.ம.க தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களின் பக்ரீத் வாழ்த்து

உலகம் முழுவதும் இஸ்லாமியர்களால் கொண்டாடப்படும் முக்கியமான பண்டிகைகளுள் ஒன்று “ தியாகத்திருநாள் “ என்று போற்றப்படும் பக்ரீத் பண்டிகையாகும்.

“ வறியார்க் கொன்றீவதே ஈகை “ என்ற குறள் நெறியே தங்கள் வாழ்வின் நெறியாகக் கொண்டு, இறைதூதரின் தியாகங்களை நினைத்துப் போற்றும் இனிய திருநாள் பக்ரீத் நன்னாள். இந்த இனிய திருநாள் உலகெங்கும் எந்நாளும் சகோதரத்துவம் தழைத்தோங்கும் விதமாகவும், சமத்துவமும் சமாதானமும் நிலைத்திருக்கும் விதமாகவும், அனைத்து இதயங்களிலும் அனபைப் பரிமாறும் நன்னாளாகப் பரிணமிக்கட்டும்.

தியாகத் திருநாளாம் பக்ரீத் நன்னாளில் இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நல்வாழ்த்துக்களைத் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.